1986 மே 6]

சந்தன எண்ணை தொழிற்சாலைகள்

668—(* வினா எண் 6095) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சந்தன எண்ணை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவை ஆண்டொன்றுக்கு ஈட்டும் லாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தில் ஒன்றும் தனியார் துறையில் மூன்றும் உள்ளன.

(ஆ) 1985 அக்டோபரிலிருந்து தமிழ்நாடு வனத்தோட்டக் கழக சந்தன தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓராண்டு முடிந்த பிறகே லாப நட்ட கணக்கு அறிய இயலும். தனியார் தொழிற்சாலைகளைப் பற்றிய இலாப—நஷ்ட விவரம் அரசிடம் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற சந்தன எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? உற்பத்தி ஆகும் சந்தன எண்ணெய்யை மூலப் பொருளாகக் கொண்டு சந்தன சோப்பு செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஒரு டன் சந்தன எண்ணெய் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இன்னும் 2 டன் சந்தன எண்ணெய் விற்பதற்காக விலை விவரங்கள் பேசப்பட்டு வருகின்றன. இதன் தொடர்பாக ஒரு துணைத் தொழில்—சோப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டம் எதும் இப்போது இல்லை. ஆனால், இந்தத் தூள்களை, சந்தன மரத்திலிருந்து கிடைக்கின்ற தூள்களை வைத்துக் கொண்டு மென் சந்தனத் தூள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஒரு திட்டம் உருவாக்கப் பெற்று, விரைவிலே தொடங்கப்படவிருக்கிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு உற்பத்தி செய்வதற்கு மல்பரிச் செடிகளை வளர்ப்பதற்கு தனிப்பட்டவர்களுக்குக் கடன் கொடுப்பதைப் போல, சந்தன மரங்களை தனிப்பட்டவர்கள் மலைகளில் உள்ள தங்களுடைய காடுகளில் உற்பத்தி செய்வதற்குக் கடன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரை சந்தன மரங்கள் இயற்கையாகவே வளர்கிற ஒன்று என்று கருதப்பட்டது. ஆனால், சமீப காலத்திலே தமிழக அரசினுடைய வனத்துறை அந்தச் சந்தன மரங்களையும் நாம் பயிர் செய்ய முடியும் என்று முயற்சி செய்து, ஒன்றிரண்டு இடங்களில் ஆரம்பப் பலனை அந்த முயற்சி அளித்திருக்கிறது. பெரிய அளவில் பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழிலைப்போல இங்கே இந்த சந்தன மரங்களை வளர்ப்பதற்கு தனியாருக்கு ஊக்கம் அளிப்பதென்பது நடைமுறையில் இயலாத ஒன்று ஆகும்.

திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்குப்பட்டு சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்ற சந்தன எண்ணெய் எந்த வகையில் விற்பனை செய்யப்படுகிறது? உலகச் சந்தையில் எந்தெந்த நாடுகள் அதை வாங்க முன் வருகின்றன என்பதை அறிய விரும்புவதோடு, சந்தனக் கட்டை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தடை விதித்திருப்பதைப் போல, சந்தன எண்ணெய் ஏற்றுமதியில் ஏதேனும் சங்கடங்கள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உலக நாடுகளோடு நாம் நேரடியாக தொடர்பு கொண்டு இந்த சந்தன எண்ணெய்யை விற்க இயலாது. ஆகவே, அவர்களுக்கு வழங்குகின்ற ஏஜென்சிகள் மூலம் நாம் இந்த விற்பனையை நடத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது முதல் முறையாக, ஒரு டன் எண்ணெய் 18.25 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. கொஞ்சம் உலகச் சந்தையினுடைய விலை

குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இப்போது கிலோ ஒன்று 1,800 ரூபாய்க்கு விற்பதற்காக பேரம் பேசப்பட்டு வருகிறது. ஆகவே, உலகத்தினுடைய சந்தையில் நம்முடைய சந்தன எண்ணெய்யினுடைய தரம் உயர்ந்ததாக இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்த எண்ணெய்யை ஏற்றுமதி செய்வதற்கு எந்தவிதமான சங்கடங்களும் இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சந்தன ஆலையில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களது பணிப் பாதுகாப்புக்காக அரசு அவர்களை நிரந்தரம் செய்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமா? சந்தன மரங்கள் எங்கெங்கு பதப்படுத்தப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை இப்பொழுதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது. இதிலே 89 நபர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்துவது என்பது இனிமேல்தான் முடிவெடுக்கப்பட வேண்டிய ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்தன மரங்களைப் பதப்படுத்துகின்ற இடத்தைப்பற்றிக் கேட்கிறார்கள். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தர முடியும்.

ஆனைமலைப் பகுதியை தேசிய பூங்காவாக்கல்.

669—(* வினா எண் 7354) திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 82 ஆனைமலைக்குன்று கிராமத்தில் உள்ள பூனாச்சி வனச்சரகம், தூணக்கடவு வனச்சரகம் முதலியவற்றை தேசிய பூங்காவாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) பூனாச்சி மற்றும் தூணக்கடவு வனச் சரகங்கள் ஆனைமலை